வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 | 15.07.2026 புதன்கிழமை | இதழ் : 190 | பக்கங்கள் : 08


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# நிதிப் பிரச்னை ஏதுமில்லை மாகாண தேர்தலுக்கு தயார்!

## அரசாங்கம் பகிரங்க அறிவிப்பு



கொழும்பு, ஜூலை. 15

புதிய தேர்தல் முறைமை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டவுடன், மாகாண சபை தேர்தலை எப்போது வேண்டுமானாலும் நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. இதற்காக நிதிப் பற்றாக்குறை எதுவும் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் உள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை தேர்தலை கூடிய விரைவில் நடத்துவதே எங்களது பிரதான எதிர்பார்ப்பாகும். எனினும், தேர்தல் என்பது மக்களின் உண்மையான விருப்பை பிரதிபலிக்கும் ஒன்றாக அமைய வேண்டும். இலங்கை மக்கள் நீண்ட காலமாகவே, தங்களுக்குப் பழக்கமான விருப்பு வாக்கு முறைமையை ஒழித்து, தங்கள் தொகுதிக்கு பொறுப்பான ஒரு மக்கள் பிரதிநிதியை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்

07

# தொல்லியல் பிரச்னைகளுக்கு நியாயமான தீர்வு வேண்டும்!

## தமிழரசுக் கட்சி கோரிக்கை



கொழும்பு, ஜூலை. 15

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் தொடர்பாக எழுந்துள்ள பிரச்னைகளுக்கு நியாயமானதும் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு அண்மையில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, வடக்கு மற்றும்

07

# செம்மணிப் புதைகுழி அகழ்வு இன்று மீண்டும் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜூலை. 15

செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் இன்று புதன்கிழமை காலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை 56 நாள்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 32 நாள்கள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுள்ளன. கடந்த 23ஆம் திகதியுடன் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

செம்மணி மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகள் கடந்த ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி

07

# எத்தனை கூட்டணி அமைத்தாலும் எங்கள் அரசை அசைக்க முடியாது!

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



யாழ்ப்பாணம், ஜூலை. 15

எத்தனை கூட்டணிகளை அமைத்தாலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அசைக்கமுடியாது என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டட திறப்பு விழாவுக்கு வருகை தந்த அமைச்சரிடம், தமிழ் - முஸ்லீம் கட்சிகளின் புதிய

07

# ஜே.வி.பிக்கு விவசாயிகளினால் இன்று தலைவலி ஏற்பட்டுள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை. 15

தற்போதைய அரசாங்கம் தொடர்ந்து இந்நாட்டு விவசாயிகளை அவமதித்து, அவர்களை துயருக்குள் தள்ளி வருகின்றது. அரசாங்கத்துக்கு இலட்சக்கணக்கில் வாக்களித்த விவசாயிகள் கசிப்புக்காரர்களாகவும், செயற்கை விவசாயிகளாகவும் மாறியுள்ளனர். அன்று மக்கள் விடுதலை முன்னணிக்கு வளமாக இருந்த விவசாயிகள் இன்று அவர்களுக்கு தலைவலியாக மாறியுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர்

07

# இலங்கையில் முதன்முறையாக ஏ.ஐ. உதவியுடன் சத்திர சிகிச்சை

கொழும்பு, ஜூலை. 15

இலங்கையின் அறுவை சிகிச்சை மருத்துவத் துறையில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் வகையில், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பத்துடன் கூடிய ரோபோடிக் வசதியின் உதவியுடன் முதன்முறையாக இரண்டு அறுவை சிகிச்சைகளை மருத்துவக் குழுவொன்று வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

இந்த விசேட அறுவை சிகிச்சைகள் இரண்டும் அண்மையில் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில்

07

# ஜனநாயக விரோத செயற்பாடுகளை அரசாங்கம் உடனே நிறுத்தவேண்டும்

## ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து



கொழும்பு, ஜூலை. 15

நாட்டின் தற்போதைய அரசியல் சூழலில், அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகள் ஜனநாயகத்திற்கு பெரும் சவாலாக மாறியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா

07

புதுக்குடியிருப்பு பாடசாலையில் பதற்றம்

# சக மாணவர்களைத் தாக்கிய மூன்று பேர் விளக்கமறியலில்!

முல்லைத்தீவு, ஜூலை. 15

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றில் சக மாணவர்களை இரும்புக் கம்பியால் தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று மாணவர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் பாடசாலை நேரத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், உயர்தர வகுப்பில்

07

# தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைவின் பின்னணியில் அரசாங்கம் இல்லை

கொழும்பு, ஜூலை. 15

"தமிழ் பேசும் கட்சிகளின் சங்கமத்தின் பின்னணியில் அரசாங்கம் இல்லை." என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது தமிழ் பேசும் கட்சிகளின் ஒன்றிணைவின் பின்னணியில் அரசாங்கம் உள்ளதா என கேள்வி எழுப்பட்டது. இதற்கு

07

நீர்கொழும்பு சிறை வன்முறை:

# துப்பாக்கிச் சூடு நடத்திய அதிகாரி மீது விசாரணை

கொழும்பு, ஜூலை. 15

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட மோதலைக் கட்டுப்படுத்துவதற்காக துப்பாக்கிச் சூடு நடத்திய சிறைச்சாலை அதிகாரி, பல்லேகலை சிறைச்சாலைக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான ஏ.சி. கஜநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜூலை 6ஆம் திகதி நீர்கொழும்பு

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தவறுகளை மறைக்க சதித்திட்ட முத்திரை!



## அரசை சாடுகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஜூலை. 15
அரசாங்கம் தோல்விகளை மறைக்க எதிர்க்கட்சிகள் மீது பழி சுமத்துவதாக பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் பியல் நிசாந்த த சில்வா தெரிவித்துள் ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நாட்டில் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பு இல்லாததால் அரச நிர்வாகக் கட்டமைப்பு ஸ்தம்பிதமடைந்துள்ளது.

அதேபோன்று சிறைச்சாலை மோதல்களும் கைதிகளின் மர ணங்களும் அரசாங்கத்தின் பாது காப்பு மற்றும் நிர்வாக அலட்சி யத்தை வெளிப்படுத்தியுள்ளன.

அத்துடன், தமது தோல்வி களை மறைக்க, இந்த சம்பவங் கள் எதிர்க்கட்சியினரின் சதித் திட்டம் என ஆளும் தரப்பு குற் றம் சாட்டுகிறது.

உயிரிழப்புகளுக்குப் பொறுப் பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்காததால் பொதுமக்களும் அதிகாரிகளின் குடும்பத்தின ரும் கடும் விரக்தியில் உள்ள னர்.

தற்காலிக அரசியல் நாடகங் கள் மூலமாக நாட்டின் உண் மையான பொருளாதார மற்றும் சமூகப் பிரச்னைகளை ஒருபோ தும் தீர்க்க முடியாது-என்றார்.

# நீதிபதிகளின் ஓய்வு வயது நீடிப்பு; நீதித்துறை சேவை சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை. 15
நீதிபதிகளுக்கான அரசியல மைப்பு ரீதியாக நிர்ணயிக்கப் பட்ட ஓய்வுபெறும் வயதை நீட்டிப்பதற்கான முன்மொழிவு களை இலங்கை நீதித்துறை சேவைச் சங்கம் அதிகாரபூர்வ மாக எதிர்த்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதி பதி அநுரகுமார திஸாநாயக்க வுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், உயர்நீதிமன்ற நீதிபதிகள் உட் பட நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை நீடிப்பதை தாங்கள் ஏற்கவில்லை என்று அச்சங்கம் தெரிவித்துள்ளது.

2026 ஜூலை 11 அன்று நடைபெற்ற சிறப்புப் பொதுச் சபைக் கூட்டத்தில், இரகசிய வாக்கெடுப்பு மூலம் இந்த முடிவு ஒருமனதாக எடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது என்று அச்சங்கம் கூறியுள்ளது.

ஓய்வுபெறும் வயதை மாற்றி யமைக்கும் அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு எதிராக நீதித் துறையினரிடையே எதிர்ப்பு வலுத்து வரும் சூழலில் அச்சங் கத்தின் இந்த நிலைப்பாடு வெளி வந்துள்ளது. (அ)

# 3 ஆண்டுகள் நிறைவடையும்வேளை அரசின் உண்மைநிலை வெளிப்படும்!

## திலும் அமுனுகம கூறுகிறார்

கொழும்பு, ஜூலை. 15
தற்போதைய அரசாங்கத்தை மக்கள் சோதனை செய்து பார்ப் பதற்கே ஆட்சியை ஒப்படைத் துள்ளதாகவும், இன்னும் மூன்று ஆண்டுகள் நிறைவடையும் போது அவர்களின் உண்மை நிலை முழுமையாக வெளிப்ப டும் என்றும் முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தற்போது இந்த அரசாங் கத்தை மக்கள் சோதனை செய்து பார்ப்பதற்காகவே ஆட்சிப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏன் அவ்வாறு கொடுக்கப் பட்டது என்றால், இல்லாவிட் டால் கடந்த 76 ஆண்டுகால சாபம் என்று கூறுவதைப் போல,



இன்னும் ஒரு 76 ஆண்டுகளுக்கு இதையேதான் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

“எங்களிடம் ஆட்சியைக் கொடுத்திருந்தால் நாங்கள் இதைவிட மிகச் சிறப்பாகச் செய் திருப்போம்“ என்று அவர்கள் தொடர்ந்து கதை பேசிக்கொண்டே இருந்திருப்பார்கள்.

ஆனால், அவர்களின் ஆட் சிக் காலத்தின் மீதமுள்ள மூன்று ஆண்டுகள் போதும்போது, அவர்கள் சோதிக்கப்பட்ட விதம் மக்களுக்கு நன்றாகவே புரியும்- என்றார். (அ)

# பத்து ஆண்டுகளில் இலங்கையில் பிறப்பு வீதம் கடுமையாக வீழ்ச்சி!

கொழும்பு, ஜூலை. 15
பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு வெளியிட் டுள்ள தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டு வரையிலான தசாப்த காலத்தில் இலங்கை யில் பிறப்புகளின் எண்ணிக்கை சுமார் 1 இலட்சத்து 20 ஆயிரத் தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

பிறப்பு விகிதம் வீழ்ச்சிய டைந்து வரும் பின்னணியில், குழந்தை பிறப்பை ஊக்குவிப் பதற்காக அரசாங்கம் தேவை யான ஆதரவையும் சலுகை ளையும் வழங்கும் என்று பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரி வித்துள்ளார்.

நாட்டில் பிறப்புகளின் எண்ணிக்கை 2015 முதல் 2025 வரை தொடர்ந்து குறைந்து வந்துள்ளதுடன், 2019ஆம் ஆண்டுக்குப் பின்னரே இந்த வீழ்ச்சி மிகவும் அதிகமாக மாறி யுள்ளது.

அதிகாரபூர்வ புள்ளிவிவ ரங்களின்படி, இலங்கை 2019ஆம் ஆண்டில் 319,010 குழந்தைகள் உயிருடன் பிறந்தன. இந்த எண்ணிக்கை 2020 இல் 301,706 ஆகவும், 2021 இல் 284,848 ஆகவும், 2022 இல் 275,321 ஆகவும், 2023 இல் 247,900 ஆகவும், 2024 இல் 220,761 ஆகவும், 2025 இல் 214,570 ஆகவும் குறைந் துள்ளது.

இந்த புள்ளிவிவரங்கள் 2019 மற்றும் 2025 ஆம் ஆண் டுகளுக்கு இடையில் பிறப்புக ளில் தோராயமாக 33 வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றன.

தாமதமான திருமணங்கள், குறைந்த திருமண விகிதங்கள், அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, இனப்பெருக்க வயதி லுள்ள இளைஞர்களின் வெளி நாட்டு இடம்பெயர்வு, வெளி நாட்டு வேலைவாய்ப்பு கார ணமாக தம்பதியினர் பிரிந்தி ருத்தல், சிறிய குடும்பங்களுக் கான விருப்பம் அதிகரிப்பு உள் ளிட்ட பல காரணங்களை அதி காரிகள் இந்த வீழ்ச்சிக்கு அடையாளப்படுத்தியுள்ளனர்.

உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் பெண்களின் பங்க ளிப்பு அதிகரிப்பு, குடும்பக் கட்டுப்பாடு குறித்த மாறிவ ரும் அணுகுமுறைகள், கருத் தடை முறைகளின் பயன்பாடு மற்றும் கருவுறுதல் தொடர் பான பிரச்னைகளும் பிறப்பு விகிதம் குறைவதற்கு பங்களித் துள்ளன. (அ)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 33 வீதமாக உயர்த்துக!

கொழும்பு, ஜூலை. 15
உள்ளூராட்சி மன்றத் தேர் தல்களில் பெண்களின் பிரதிநி தித்துவத்தை குறைந்தபட்சம் 33 வீதமாக அதிகரிப்பதற்குத் தேவையான கொள்கை மற்றும் சட்ட ரீதியான திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியதன் அவசியம் இலங்கைப் பாராளு மன்ற பெண் உறுப்பினர்கள் குழுவில் வலியுறுத்தப்பட்டுள் ளது.

மகளிர் மற்றும் சிறுவர் அலு வல்கள் அமைச்சரும், பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக் கான ஒன்றியத்தின் தலைவரு மான சரோஜா சாவித்திரி போல் ராஜ் தலைமையில் பாராளுமன் றத்தில் நடைபெற்றது.

இக்குழுக் கூட்டத்தில், மாகாண சபைத் தேர்தல்களில் பெண்கள் மற்றும் இளைஞர்க ளின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வது தொடர்பாகவும், மாகாண சபைத் தேர்தல் எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நடத் தப்பட வேண்டும்என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப் பதற்கும், அதற்கான யோசனை கள் மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் நியமிக்கப் பட்டுள்ள பாராளுமன்ற விசே டதெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக் கப்படவுள்ள முன்மொழிவுகள் தொடர்பாகவும் கலந்துரையா டப்பட்டது.

இதன்போது, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களுக்கான வேட் புமனுப் பட்டியல்களில் மட்டு மன்றி, தேர்தலில் தெரிவு செய் யப்படும் உறுப்பினர்களிடை யேயும் குறைந்தபட்சம் 33 வீத பெண்களின் பிரதிநிதித்து வத்தை உறுதி செய்யும் வகை யில் சட்ட ஏற்பாடுகளை அறி முகப்படுத்தவேண்டியதன் அவ சியம் குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த முன்மொழிவுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்களை நடத்த வும் இதன்போது தீர்மானிக்கப் பட்டது.

மேலும், பெண்களின் பிரதி நிதித்துவத்தை உறுதி செய்வதற் காக வேட்புமனுப் பட்டியல் மட்டத்தில் அல்லது கட்டாய ஆசன ஒதுக்கீட்டின் மூலம் அல் லது கலப்பு தேர்தல் முறைமை யின் கீழ் பொருத்தமான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத் துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும் குழு உறுப்பி னர்களின் கவனம் செலுத்தப் பட்டது.

இந்தக் குழுக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் கலாநிதி கௌஷல்யா ஆரியரத்ன, ஒன்றி யத்தின் பிரதி இணைத்தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சட் டத்தரணி சாமிந்திராணி கிரி யெல்ல மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹினி குமாரி விஜேரத்ன, சட்டத்த ரணி சாகரிகா அத்தாவுட, கிருஷ்ணன் கலைச்செல்வி, சட்டத்தரணி துஷாரி ஜயசிங்க, சட்டத்தரணி அனுஷ்கா திலக ரத்ன, சட்டத்தரணி ஹசாரா லியனகே, தீப்தி வாசலகே, அம் பிகா சாமுவெல், சட்டத்தரணி கீதா ஹேரத் மற்றும் சட்டத்த ரணி லக்மாலி ஹேமசந்திர ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# டித்வாவினால் வீடிழந்தவர்களுக்கான வாடகை உதவி 3 மாதங்களுக்கு நீடிப்பு

கொழும்பு, ஜூலை. 15
டித்வா சூறாவளி காரண மாக வீடுகளை இழந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த தற்காலிக குடியிருப்புக்கான 6 மாத வீட்டு வாடகை உதவித்தொகை, மேலும் 3 மாதங்களுக்கு நீடிக் கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தற்காலிகமாக குடியிருப்புகளைப் பயன்படுத் துவதற்காக இந்த வாடகை உதவித்தொகை வழங்கப்பட்டு வந்த நிலையில், அவர்களின் தற்போதைய தேவைகளைக் கருத்தில் கொண்டு இந்த கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் மூலம், வீடுகளை இழந்த பாதிக்கப்பட்ட குடும் பங்கள் தொடர்ந்து மேலும் மூன்று மாதங்களுக்கு வீட்டு வாடகை உதவித்தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் என நிதி அமைச்சு குறிப்பிட்டுள் ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
15.07.2026 புதன்கிழமை
பராபவ வருடம், ஆனி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தமிழ்பேசும் அரசியல் கட்சிகளின் பொதுத்தளம்

தமிழ்பேசும் சமூகங்களை (தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையக தமிழர்கள்) பிரதிநிதித்துவம் செய்யும் ஆறு அரசியல் கட்சிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் கூடி பொதுவான தளம் ஒன்றை அமைக்க இணக்கி யிருக்கின்றன.

தற்செயலானதுதான் என்றாலும் இந்த ஒன்றிணைவு இடம்பெற்ற தினம் (ஜ"லை 13) கொழும்பில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் விடுதலை புலிகளினால் கொல்லப்பட்டு சரியாக 37 ஆண்டுகள் நிறைவடைந்த தினமாகும்.

இலங்கை, தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலா ளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகளே இந்த இணக்கப் பாட்டுக்கு வந்திருப்பவையாகும்.

தங்களது சமூகங்கள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடுவதையும் கருத்துக்களைப் பரிமாறி இணக்கப்பாட்டை உருவாக் குவதையும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை நாடுவதையும் நோக்கமாகக் கொண்டதே இந்த முன்முயற்சியாகும்.

இந்த ஆறு கட்சிகளினதும் தலைவர்கள் கொழும்பில் செய்தியாளர்கள் மகா நாட்டில் அளித்த விளக்கங்கள் மற்றும் பின்னர் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் உச்சபட்ச அதிகாரப் பகிர்வை உள்ளடக்கியதாக புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டுவர வேண்டும். மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும். மூன்று சமூகங்களையும் பாதிக்கும் காணிப் பிரச்னைக்கு நியாயமானதும் நிலையானதுமான தீர்வுகளைக் காண வேண்டும் என்ற மூன்று பிரதான கோரிக்கைகளை அவை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் முன்வைக்கின்றன.

ஆறு கட்சிகளும் கொள்கை மற்றும் அரசியல் விவகாரங்களில் அவற்றின் சொந்த நிலைப்பாடுகளைத் தனியாகப் பேணுவதற்கும் அவற்றுக்காக குரல் கொடுப்பதற்கும் கொண்டிருக்கும் சுதந்திரத்தை அங்கீகரிக்கின்ற அதேவேளை, தங்களது சமூகங்களுக்கு பொதுவானவையாக இருக்கின்ற பிரச்னைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு தீர்வுகளை நாடுவதற்கான பொறிமுறையாக பொதுத்தளம் அமையும் என்றும் இணக்கம் கண்டிருக்கின்றன.

தங்களது சமூகங்களுக்கு பொதுவானவையாக இருக்கும் பிரச்னைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு இந்த கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படும்போது நாளடைவில் ஏற்படக்கூடிய புரிந்துணர்வு அந்த சமூகங்களுக்கு பிரத்தியேகமா னவையாக இருக்கும் பிரச்னைகளுக்கு தீர்வுகளை நாடும்போது பழைய நிலை ப்பாடுகளில் சாத்தியமான விட்டுக் கொடுப்புக்களைச் செய்வதற்கு வழிவகுக்கக் கூடிய ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும் என்று நம்பலாம்.

இதற்கு இந்த கட்சிகளின் தலைவர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரங்களைப் புரிந்துகொண்டு செயற்படக்கூடியதாக அரசியல் முதிர்ச்சியையும் விவேகத்தையும் வெளிக்காட்டவேண்டும்.

கடந்த காலத்தில் இந்த மூன்று சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்படு வதற்கு கிடைத்த வாய்ப்புக்களை சரியான முறையில் பயன்படுத்த முடியாமல் போன காரணிகளைப் பற்றிய தெளிவும் இந்த கட்சிகளின் தலைவர்களுக்கு இருக்க வேண்டும்.

தென்னிலங்கையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிரான அணி திரட்டல்களைச் செய்வதற்கு எதிரணிக் கட்சிகள் மீண்டும் இனவாதத்தைக் கையிலெடுத்திருக்கும் ஒரு நேரத்தில் ஆறு தமிழ்பேசும் கட்சிகளின் பொதுத் தளம் நோக்கிய ஒன்றிணைவு இனவாதச் செயன்முறையாக பெரும்பான்மைச் சமூகத்துக்கு காண்பிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. இதை உணர்ந்து இனங்களுக்கு இடையில் குரோதங்களைத் தூண்டுவதற்கு நினையாப் பிரகா ரமேனும் வாய்ப்புக்களைக் கொடுக்காமல் மிகுந்த நிதானத்துடன் செயற்பட வேண்டியது தமிழ்பேசும் அரசியல் தலைவர்களின் தலையாய பொறுப்பாகும்.

## ஒவ்வொரு தென்னிந்திய மாநிலத்திற்கும் பிடித்தமான ஜானகி பாடல் ஒன்று உண்டு



இனிமை நிறைந்த, கோடிக்கணக்கான மக்களின் கூட்டு நினைவுகளில் ஆழப் பதிந்த அந்தக் குரல் கடந்த சனிக்கிழமை அன்று மௌனித்துப் போனது. மரியாதையின் கார ணமாகவும் பல வருடங்களாக மக்கள் தன்னிச் சையாக வழங்கியதாலும் "ஜானகி அம்மா" என்று அன்போடு அழைக்கப்படும் எஸ். ஜானகி, மைசூரில் தனது கடைசி மூச்சை நிறுத்திக் கொண்டார்.

பாரதிராஜா, கே. பாக்யராஜ் ஆகியோரின் மறைவுக்குப் காலத்திற்குப் பிந்தைய இந்த வாரங்களில், ஜானகியின் மறைவு காலத்தின் பனிமூட்டத்திற்குள் நகர்ந்திருப்பது மற்றொரு பெரிய அடியாகும். பெரும்பாலான இந்தியர் களுக்கு, குறிப்பாக விந்திய மலைக்கு தெற்கே உள்ளவர்களுக்கு, அவரது குரல் மிகவும் இன்றி யமையாததாக இருந்தது.

தமிழ், கன்னடம், தெலுங்கு அல்லது மலை யாளம் என எந்தத் திராவிட மொழியாக இருந் தாலும் சரி, அந்த மொழிகளைப் பேசும் ஒவ் வொரு ரசிகருக்கும் தனக்குப் பிடித்தமான ஒரு ஜானகி பாடல் நிச்சயம் இருக்கும். மேலும், அவர் தங்களது மாநிலத்தைச் சேர்ந்தவர் என்றே அது அவர்களை நம்ப வைத்தது.

ஜானகி இந்தி மற்றும் சிங்கள மொழிகளி லும் பாடியுள்ளார், ஆனால் அவர் தென்னிந் திய மொழிகளில்தான் தனக்கென ஒரு தனி இடத்தை உருவாக்கிக் கொண்டார். அவரது பாடல்கள் அன்பும் சோகமும் கலந்ததாக இரு ந்தன, மேலும் அவை பெரும்பாலும் கடந்து போன காலங்களுக்கு மரியாதை செலுத்துவ தாக அமைந்தன.

மலையாளத்தில் தேனும் வயம்பும், தமிழில் சின்னத் தாயவள், கன்னடத்தில் நகுவ நயன அல்லது தெலுங்கில் புவ்வு நவெனு என எது வாக இருந்தாலும், அவர் அதன் உணர்ச்சியை யும், சூழலையும், திரைக்கதையில் அந்தப் பாடலின் தேவையையும் மிகச் சரியாகப் புரிந்து கொண்டு, அவற்றை அழியாத காவியங்களாக மாற்றினார்.

தனிப் பாடல்களாக இருந்தாலும் சரி, அல்லது இணைந்து பாடுவதாக இருந்தாலும் சரி, ஜானகி எப்போதும் தனித்துவமாகவே விளங்கினார். 1990 ஆம் ஆண்டின் சூப்பர் ஹிட் திரைப்படமான மைக்கேல் மதன காம ராஜன் படத்தில் கமல்ஹாசனுடன் அவர் பாடிய சுந்தரி நீயும் என்ற டூயட் பாடல், இப்போதும் கேட்பவர்களை ஈர்க்கும் ஒரு பாடலாகும். எஸ்.பி. பாலசுப்பிரமணியம், கே.ஜே. யேசுதாஸ் போன்றோருடன் இணை ந்து பாடும் போதும், தனது இடத்தை நிலை நிறுத்திக் கொள்ளவும், தனது ஒட்டுமொத்த தொழில் வாழ்க்கையிலும் சக கலைஞர்களின் மரியாதையைப் பெறவும் அவரால் முடிந்தது.

இது ஒலியியல் உலகில் ஜானகியின் ஆதிக் கத்தை வெளிப்படுத்தியது. இசை என்பது அழகியல் மண்டலத்தை வளப்படுத்தும் ஒரு கலை என்றால், ஜானகி அதன் போட்டியற்ற இராணியாக விளங்கினார்.

திரையுலகில் இருந்த போதிலும், அவர் தனது நடத்தையில் மிகவும் எளிமையான ஒரு சாமான்யராகவே இருக்க விரும்பினார். எளி தில் அணுகக்கூடியவராகவும், ஒருவேளை தனது திறமையையும் வெற்றியையும் மிகவும் சாதாரணமாக எடுத்துக் கொண்டதாலும், அவர் பொதுவெளியில் தன்னை வெளிப்ப டுத்திக் கொண்ட விதத்தில் ஒரு புனிதமான ஒளிவட்டம் இருந்தது.

அனைத்து இந்திய வானொலி (All India Radio) அறிவிப்பாளர், ஒலிபரப்பப்படவிருக் கும் பாடல் ஜானகி பாடியது என்று குறிப்பி டும் போதெல்லாம், பலதரப்பட்ட இசை அமைப்பாளர்களின் கீழ் பல பாடல்களைப் பாடி, தன் சக கலைஞர்கள் அனைவரிடமிரு ந்தும் அளவற்ற அன்பைப் பெற்றது அவரது நீண்ட ஆயுளுக்கான (இசைப் பயணத்திற்கான) ஒரு சான்றாகும். இசை அமைப்பாளர் இளை யராஜாவின் அறிமுகத் திரைப்படமான அன் னக்கிளி படத்தில் அவர் முதன்மைப் பாடகி யாக இருந்தது, அவரது புகழ்பெற்ற கிரீடத் தில் மற்றுமொரு இறகாகும்.

இந்த இசைக் குயில் தனது 88 ஆவது வயதில் நம்மை விட்டுப் பிரியும்போது, சுவைப்பதற்கான நினைவுகளும், நெஞ்சில் போற்றுவதற்கான பாடல்களும் அங்கே உள்ளன. கலைகளிலேயே மிகச் சிறந்தது என்றும் அழியாதது என்ற உண்மையிலிருந் தும், அவரது மாயாஜால குரல் நாண்களின் மூலமும் ஜானகி என்றென்றும் வாழ்வார் என்பதில் நாம் ஓரளவு நிம்மதி அடையலாம்.

### கிராமப் பெண்களின் குரலாக உருவெடுத்த "இசை அரசி"

பாரதிராஜா மக்களுக்குக் கிராமங்களை எப்படிப் பார்க்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார் என்றால் அந்தக் கிராமங்களில் உள்ள பெண்களின் குரலுக்கு எப்படிச் செவி சாய்க்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தவர் நிச்சயமாக ஜானகி தான். பாரதிராஜாவின் பரந்த கிராமப்புறக் காட்சிகளுக்கு அவர் ஒரு மிகச்சரியான குரல் துணையாக இருந்தார்.

நாட்டுப்புறக் கலையை ஒரு துடிப்புள்ள, சுவாசிக்கக்கூடிய, அவசியமான வாழ்வியல் முறையாக இந்த ஜோடி திரைத்துறையில் எப்படிக் கொண்டு வந்தது என்பதைக் கூற அறிவியல் பூர்வமான வழிகள் எதுவும் இல்லை, ஆனால் அவர்கள் அதில் ஒரு மாபெரும் சாத னையைச் நிகழ்த்திக் காட்டினார்கள் என்று சொல்வது முற்றிலும் பாதுகாப்பானது.

பாரதிராஜா திரையில் பெண் கதாபாத்தி ரங்களுக்குப் பெரும் முக்கியத்துவம் கொடு த்து எழுதினாலும், ஜானகி அம்மாவின் குரல் தான் அந்த நாயகிகளின் கண்ணீர், அவர்களின் ஆசைகள், அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் கனவுகளுக்கு முழுமையான வடிவத்தைக் கொடுத்தது.

பெரிதும் போற்றப்பட்ட உன்னதமான 16 வயதினிலே திரைப்படத்தையும், அதன் அற்புதமான செந்தூரப் பூவே பாடலையும் எடுத்துக் கொள்ளுங்கள். இளமையான ஸ்ரீதேவி எந்தக் கவலையும் இல்லாமல் சுதந்தி ரமாக இருக்கிறார் அவர் ஒரு மெல்லிய துள்ள லுடன் பாடலைத் தொடங்குகிறார். மெல்லிசை முன்னேறும் போது, அந்த இளம் பெண் தென்றலிடம் தனது செய்தியைக் கொண்டு சேர்க்கச் சொல்லும் போது, ஒரு மென்மை யான, அழகான காதல் உணர்வு மெல்லக் குடியேறுகிறது. அது வெட்கத்துடனோ அல்லது தயக்கத்துடனோ இல்லாமல், ஜானகியின் குரல் "மயிலு" என்ற கதாபாத் திரத்திற்கு வழங்கும் ஒரு நம்பிக்கையோடு வெளிப்படுகிறது. இயக்குனரைப் போலவே, ஜானகி அம்மா வின் பாட்டும் பெண் ஆசை களுக்கான ஒரு பாதுகாப்பான, நியாயமான இடத்தை உரு வாக்கியது. நிஜ உலகம் பின்னர் அவர்களைத் தண்டித்தாலும் கூட.

மேலும், அவர் கிராமப்புறப் பெண்களுக் காகப் பாடும் போது, ஜானகி அம்மா தனது குரலில் ஒரு தனித்துவமான தன்மையையும் ஆழத்தையும் உறுதி செய்தார். அது இளைய ராஜாவின் மண்வாசனை மிகுந்த இசைக்கும், பாரதிராஜாவின் காட்சிகளுக்கும் மிகக் கச்சிதமாகப் பொருந்தியது. அவரது குரலின் முழுமை, சில பெண்கள் கனவு மட்டுமே காணக்கூடிய,

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

(தி இந்து, கே.சி. விஜயகுமார், ரம்யா கண்ணன் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூலை - 15 புதன்கிழமை
பராபவ வருடம் - ஆனி 31
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திதித்துவயம்




**மேடம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டிவரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**கடகம்**
எதிர்காலம் பற்றிய பயம் வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**கன்னி**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் உதவுவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**தனுசு**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில்க உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மகரம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**கும்பம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

# "ஐஸ்" போதைப் பொருள் வழக்கு; குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை!

## மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பு

மன்னார், ஜூலை. 15

5 கிராமுக்கும் அதிகமான "ஐஸ்" போதைப் பொருளைத் தன்வசம் வைத்திருந்தும், அதனை விற்பனை செய்தும் குற்றம் நிருபிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு மன்னார் மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி, 5 கிராமுக்கும் அதிகமான "ஐஸ்" போதைப் பொருளைத் தன்வசம் வைத்திருந்ததுடன், அதனை விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட நபரே இவ்வாறு தண்டனைக்குள்ளாகியுள்ளார்.

இந்த வழக்கின் விசாரணைகள் மன்னார் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில், அரச சட்டவாதிகளான தேவ விதுரன் மற்றும் ஆறுமுகம் தனுஷன் ஆகியோர் அரசுத் தரப்பின் சார்பில் சாட்சிகளையும் ஆதாரங்களையும் நீதிமன்றத்தில் முன்வைத்தனர்.

அரசுத் தரப்பால் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள் அனைத்தும், குற்றவாளி மீதான குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிப்பதாக நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இதையடுத்து, வழக்கின் அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்த மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்த ராஜா, குற்றச்சாட்டுகள் முழுமையாக நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தீர் மானித்து, கடந்த ஜூலை முத லாம் திகதி குறித்த குற்றவா ளிக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

(அ)

# உயர்தர மாணவர்களுக்கான சுய கற்றல் கையேடு வழங்கல்!

யாழ்ப்பாணம், ஜூலை. 15

உயர்தர மாணவர்களுக்கான இலவச சுய கற்றல் கையேடு வெளியீடு வெண்கரம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

உயர்கல்வி விரிவாக்க மீள் எழுகை ஆற்றுப்படுத்தல் எனும் தொனிப் பொருளில் உயர்தர மாணவர்களுக்கான சுய கற்றல் கையேடுகள் வெளியிடும் நிகழ்வு வெண்கரம் பிரதான செயற்பாட்டாளரும் ஓய்வுநிலை சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான சண்முகேந்திரன் சுகுணராணி தலைமையில் வெண்கரம் இளையோர் அணியின் நெறிப்படுத்தலுடன் சித்தங்கேணி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வெண்கரம் அறக்கட்டளையின் பிரதான செயற்பாட்டாளர்களான சி.திவாகரன் (ஓய்வு நிலை அதிபர் வட்டு மத்திய கல்லூரி, மு.செல்வஸ் தான் (ஓய்வு நிலை அதிபர் ஸ்கந்தவ ரோதயா கல்லூரி) இருவரும் இணைந்து சுய கற்றல் கையேடுகளை வெளியிட்டு வைத்தனர்.



தொடர்ந்து வாழ்த்துரைகளை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் பா.பால சுப்பிரமணியம், சங்கானை ஸ்தான அ.த.க.த பாடசாலை அதிபர் ம. முகுந்தன், சித்தன் கேணி சிறீ கணேஷ வித்தியாலய அதிபர் திருமதி அ.கலைவாணி ஆகியோர் வழங்கினர்.

வெண்கரம் பிரதான செயற்பாட்டாளரும் ஓய்வுநிலை ஆசிரியருமான ஜீ.சாந்தினிதேவி அறிமுக உரையினை நிகழ்த்தி கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்.

வருகை தந்த மாணவர்களுக்கு கையேடுகள் வழங்கி வைக்கப்பட்டு மாணவர்கள், சுய கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான வழிகாட்டல் செயற்பாட்டுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

(அ-05)

# யாழ்.சிறைச்சாலை வளாகத்தின் மேல் 'ட்ரோன்' பறக்கவிட்ட இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை. 15

யாழ்ப்பாண சிறைச்சாலை வளாகத்தின் மேல் "ட்ரோன்" பறக்கவிட்ட குற்றச்சாட்டில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாண சிறைச்சாலை வளாகத்தின் மேல் , நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை வேளை "ட்ரோன்" பறந்துள்ளது. அதனை அவதானித்த சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் , அது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் "ட்ரோன்" பறக்க விட்ட இளைஞனை கைது செய்ததுடன், ட்ரோனையும் பொலிஸார் கைப்பற்றி இருந்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தவேளை, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக் கப்படும் பாலங்கள் தொடர்பில் காணொளிகளை பதிவு செய்வதற்காக, வீதி அபிவிருத்தி அதிகார சபை யால் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகவும், சிறைச்சாலைக்கு அருகில் வீதியில் அமைக் கப்படும் பாலத்தைக் காணொளி எடுத்ததாகவும் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் ட்ரோன் ஊடாக எடுத்த காணொளிகளை பரிசோதிக்கும் நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(அ)

# ஐங்கரநேசனின் 'வேர்முகங்கள்' சென்னையில் வெளியீட்டுவிழா



சென்னை, ஜூலை. 15

தமிழகத்தில் பொன்னி பதிப்பகம் வெளியிட்டுள்ள பொ. ஐங்கரநேசனின் 'வேர்முகங்கள்'நூலின் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றுள்ளது.

பொ. ஐங்கரநேசன் செவ்வி கண்ட கலை, இலக்கிய ஆளுமைகள் 19 பேரின் நேர்காணல்கள் அடங்கிய தொகுப்பை வேர்முகங்கள் என்ற பெயரில் சாளரம் பதிப்பகம் 2006ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தது. கடந்த 2025 ஆம் ஆண்டு மேலும் புதிதாக ஒரு இலக்கிய ஆளுமையின் நேர்காணலை உள்ளடக்கி 20 நேர்காணல்களின் தொகுப்பாக யாழ்ப்பாணத்தில் 'எங்கட புத்தகங்கள்' என்ற பதிப்பகம் வெளியிட்டிருந்தது. தற்போது வேர்முகங்கள் நூலை 3ஆவது வெளியீடாக சென்னையில் பொன்னி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இதற்கான வெளியீட்டு விழா கடந்த புதன் கிழமை அண்ணா நூற்றாண்டு நூலக நூல் வெளியீட்டுக் கட்டட அரங்கில் இடம் பெற்றுள்ளது.

பதிப்பாளர் வைகறைவாணனின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் இயக்குநரும் நடிகரும் படைப்பாளியுமான கவிதா பாரதி வெளியிட்டு வைக்க, ஓவியர் டிராட்ஸ்கி மருது முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். நூல் தொடர்பான கருத்துகளை காமராஜர் மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இரா. சுப்பிரமணியன், படைப்பாளியும் ஊடகவியலாளருமான ந. சுந்தரபுத்தன், வரலாற்று ஆய்வாளர் பழ. அதியமான் ஆகியோர் ஆற்றியிருந்தார்கள்.

நிகழ்ச்சியின் இறுதியின் நூலாசிரியரும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ. ஐங்கரநேசன் ஏற்புரையை நிகழ்த்தியிருந்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புகையிலையற்ற தலைமுறையை உருவாக்க நடவடிக்கை எடுங்கள்!

## இலங்கை மருத்துவ சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 15

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த எவருக்கும் புகையிலை சார்ந்த உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதைத் தடை செய்யும் "புகையிலை சார்ந்த உற்பத்தி பொருட்கள் அற்ற தலைமுறை" கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை மருத்துவ சங்கம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் விசேட கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

புகையிலை சார்ந்த உற்பத்திகள் உலகில் மிகவும் அழிவுகரமான பொருள்கள் என்றும், அதிலிருந்து இளம் தலைமுறையினரை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்றும் மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் வருடாந்தம் சுமார் 20,000 பேர் புகையிலை சார்ந்த உற்பத்தி பொருள்களின் பாவனையினால் உயிரிழப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் புகையிலை சார்ந்த உற்பத்தி பொருள்களின் பாவனையினால் 2019-ஆம் ஆண்டில் மாத்திரம் 214 பில்லியன் ரூபாய் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் ஜனாதிபதி உடனடியாகக் கவனம் செலுத்தி, அவசர நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் வலியுறுத்தியுள்ளது.

(அ)

# 70 ஆயிரத்தை நெருங்கிய டெங்கு நோயாளர்கள்!

கொழும்பு, ஜூலை. 15

நடப்பாண்டில் இதுவரை நாட்டில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்தை நெருங்கியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று முன் தினம் வரை மொத்தமாக 69,951 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கடந்த 12ஆம் திகதி வரை இந்த எண்ணிக்கை 68,672 ஆக இருந்த நிலையில், நேற்று முன் தினம் ஒரே நாளில் மட்டும் 1,279 புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டெங்கு பாதிப்பு அதிகளவில் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதுடன், அங்கு மொத்தம் 33,127 நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

மாவட்ட ரீதியில் கம்பஹா மாவட்டத்தில் அதிகபட்சமாக 14,464 நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், கொழும்பு மாவட்டத்தில் 14,004 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், ஜூலை மாதத்தின் முதல் 13 நாள்களிலேயே 14,572 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த ஆண்டில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் ஜூன் மாதத்திலேயே பதிவாகியுள்ளதுடன், அப்போது மட்டும் 21,538 பேர் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மக்களின் செலவை குறைக்கும் வகையில் தரமான போக்குவரத்து சேவை அவசியம்!

## ஜனாதிபதி அநுரகுமார வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 15

அனைவருக்கும் பயனளிக்கும் வகையில், தரமான மற்றும் வசதிகள் கொண்ட பொதுப் போக்குவரத்துத் துறையை உருவாக்கவேண்டும் என்றும், இதன் மூலம் பொதுமக்கள் போக்குவரத்திற்காக தனிப்பட்ட ரீதியில் செலவிடும் சுமையைக் குறைத்து, நாட்டுக்குள் தரமான போக்குவரத்துச் சேவையை உறுதிப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலவச சுகாதார சேவையின் மேம்பாட்டிற்கு வழங்கப்படும் அதே அவதானத்தை, பொதுப் போக்குவரத்துச் சேவையின் முன்னேற்றத்திற்காகவும் செலுத்துவதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்குத் தொடர்புடையதாக 2026ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியின் கீழ் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் 2027ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட யோசனைகள் குறித்து நேற்று முன் தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்துக்கு முந்தைய கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

புதிய திட்டமொன்றின் ஊடாக பொதுப் போக்குவரத்துச் சேவையை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறையில் 2026ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் குறித்து தனித்தனியாகக் கேட்டறிந்தார்.

பழைய பஸ்களை படிப்படியாகப் போக்குவரத்தில் இருந்து நீக்கி, புதிய பஸ்களைச் சேவையில் இணைத்துக் கொள்ளும் வேலைத்திட்டம் குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், நகர்ப்புற குறுகிய தூரப் பயணங்களுக்காக "மெட்ரோ பஸ்கள்" போன்ற வசதிகளைக் கொண்ட பஸ்களைப் பயன்படுத்துவதன் மூலம் மக்களுக்கு வசதியான போக்குவரத்தை உறுதி செய்ய முடியும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டுக்குள் நிறைவு செய்யக்கூடிய திட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றுக்கு முன்னுரிமை அளித்து வரவு-செலவுத் திட்ட நிதியை ஒதுக்குமாறு அறிவுறுத்திய ஜனாதிபதி, வெளிநாட்டு கடன் உதவிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் இறுதிப் பெறுபேறு குறித்து சரியான தெளிவில்லாமல் அத்தகைய திட்டங்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

(அ)

# போக்குவரத்து அபராதம் செலுத்துமாறு வரும் போலி குறுஞ்செய்திகள் குறித்து எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை. 15

சந்தேகத்திற்கிடமான இணைய இணைப்புகள் மூலம் போக்குவரத்து அபராதங்களை ஒன்லைனில் செலுத்துமாறு அறிவுறுத்தும் மோசடி குறுஞ்செய்திகள் மற்றும் வாட்ஸ்அப் செய்திகள் தொடர்பில் வாகன சாரதிகளுக்கு இலங்கை பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து அனுப்பப்பட்டவை போன்று தோற்றமளிக்கும் குறித்த செய்திகள், போக்குவரத்து விதிமீறல்களுக்கான அபராதத் தொகையை ஒரு வாரத்திற்குள் செலுத்துமாறு அறிவுறுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் இவ்வாறான எந்தவொரு அறிவிப்பையும் வெளியிடவில்லை என போக்குவரத்து ஒழுங்குமுறை மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ. பி. ஜே. சேனதீர தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செய்திகள் முற்றிலும் போலியானவை என தெரிவித்த அவர், அவற்றில் உள்ள இணைப்புகளை திறக்க வேண்டாம் எனவும், தனிப்பட்ட தகவல்கள் அல்லது வங்கி விவரங்களை வழங்க வேண்டாம் எனவும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# நீர்கொழும்பு சிறைச்சாலை கலவரம் மேலும் இரு அதிகாரிகள் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை. 15

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்தில் காயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் இரண்டு சிறைச்சாலை அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 25 மற்றும் 39 வயதுடைய சிறைச்சாலை அதிகாரிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன் மூலம், நீர்கொழும்பு சிறைச்சாலை மோதலில் உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகளின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், இந்த மோதலில் காயமடைந்த சில சிறைக் கைதிகளும் சிறைச்சாலை அதிகாரிகளும் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் நீர்கொழும்பு வைத்தியசாலையிலும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கதிர்காம கந்தன் கொடியேற்றம் இன்று!

காரைதீவு, ஜூலை. 15

2026ஆம் ஆண்டுக்கான கதிர்காம கந்தனாலய ஆடிவேல் விழா உற்சவத்திற்கான கொடியேற்றம் இன்று புதன்கிழமை மாலை 4 மணியளவில் பால்குடி பாவா பள்ளிவாசலில் நடைபெறும்.

இன்று இரவு முதல் நாள் திருவிழா பெரஹரா நடைபெறும்.

தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா பெரஹரா இடம்பெற்று கந்தனின் தீர்தோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை மாணிக்கங்கையில் இடம்பெறும்.

இதேவேளை கடந்த 10 ஆம் திகதி திறந்த காட்டுப் பாதை 15 தினங்கள் பக்தர்களுக்கு திறந்திருக்கும். இதுவரை சுமார் 30 ஆயிரம் அடியார்கள் பயணித்துள்ளனர்.



இப் பாதை எதிர்வரும் 24 ஆம் திகதி மீண்டும் பூட்டப்படும். (அ)

# தொழிற்சாலையில் பாரிய தீ!



அம்பாறை, ஜூலை. 15

அம்பாறை மாநகர சபைப் எல்லைக்குட்பட்ட நவகம்புர தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தேங்காய் நார் தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை திடீரென ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் தொழிற்சாலைக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

நவகம்புர தொழிற்பேட்டையில் இயங்கி வரும் 'பிரபோத' நிறுவனத்திற்குச் சொந்தமான தேங்காய் நார் தொழிற்சாலையிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

தொழிற்சாலையின் கதவொன்றை வெல்டிங் செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டிருந்தபோது, அதிலிருந்து தெறித்து விழுந்த தீப்பொறி அங்கிருந்த தேங்காய் நார் மீது பட்டதால் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தேங்காய் நார்கள் மற்றும் உமிகள் மிக வேகமாகத் தீப்பற்றக்கூடியவை என்பதால், தீப்பொறி விழுந்த சில நிமிடங்களிலேயே தீ தொழிற்சாலை முழுவதும் மிக வேகமாகப் பரவியுள்ளது. இதனால் அங்கிருந்த பெருமளவிலான தேங்காய் நார்களும், உமிகளும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

விபத்து குறித்து தகவல் அறிந்ததும், இலங்கை விமானப்படை முகாமின் தீயணைப்புப் பிரிவினரும், அம்பாறை மாநகர சபையின் தீயணைப்புப் படையினரும் உடனடியாகச் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

இரு தரப்பினரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான கூட்டு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# தாந்தாமலை முருகனாலயத்தில் களைகட்டி வரும் இரவு திருவிழா



மட்டக்களப்பு, ஜூலை. 15

வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு தாந்தாமலை முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 09 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக திருவிழா நடைபெற்று வருகிறது.

உற்சவகால பிரதம குரு சிவசிறி ந.பத்மநிலோஜ ஈசானசிவம் குருக்கள் மற்றும் ஆலய பிரதம குரு சிவசிறி பு.நவரூபன் குருக்கள் தலைமையில் தினமும் பகல் இரவு பூசைகளுடன் 21 நாள் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

இரவுத் திருவிழா நள்ளிரவு 12 மணி வரை நடைபெற்றுவருகிறது.

கடந்த 09 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கிய இவ் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 6 மணிக்கு ஆலய வளாகத்தில் உள்ள தீர்த்தக்கேணியில் தீர்த்தம் ஆடுவதுடன் நிறைவடையவுள்ளது. (அ)

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு டெங்கு நோய் விழிப்புணர்வு

அம்பாறை, ஜூலை. 15

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்காக நடைபெற்ற மாதாந்த தாய்சேய் நலக் கிளினிக்குடன் இணைந்த டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மாதன் கலந்து கொண்டு, கர்ப்பிணி தாய்மார்களுக்கு டெங்கு நோய் தொடர்பான விரிவான விழிப்புணர்வு உரையாற்றினார்.

இதன்போது, பயணம் மற்றும் சுற்றுலா மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் நுளம்புக் கடியிலிருந்து எவ்வாறு தங்களைப் பாதுகாத்துக்கொள்வது, டெங்கு நோய் பரவலைத் தடுப்பதற்காக வீட்டுச் சூழலை தூய்மையாகப் பராமரிப்பதன் அவசியம், நுளம்பு பெருகக்கூடிய இடங்களை அகற்றுதல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், தொடர்ச்சியாக காய்ச்சல் ஏற்பட்டால் அதனை அலட்சியம் செய்யாமல் உடனடியாக அருகிலுள்ள வைத்திய சாலைக்குச் சென்று இரத்தப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

கர்ப்பகாலத்தில் டெங்கு நோயால் ஏற்படக்கூடிய சிக்கல்கள், தாய் மற்றும் சேயின் நலனைப் பாதுகாப்பதற்காக கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள், மருத்துவ ஆலோசனைகளை முறையாகப் பின்பற்றுவதன் அவசியம் என்பன குறித்தும் டாக்டர் ஜே. மாதன் தெளிவுபடுத்தினார். (அ)

# தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் கூட்டு இனவாதமானதல்ல!

## மு.கா. தலைவர் ஹக்கீம் விளக்கம்

கொழும்பு, ஜூலை. 15

பாராளுமன்றத்தில் மக்கள் ஆணையைக்கொண்டுள்ள மலையகம் மற்றும் வட கிழக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் கூட்டு, இனவாத அடிப்படையிலானதல்ல என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டணி குறித்து அண்மைக்காலமாக எழுப்பப்பட்டு வரும் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் அவர் இந்த விளக்கத்தை அளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேரினவாதத்திற் கெதிராகச் செயற்படுவது குறித்து நண்பர் சுமந்திரன் விவரித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக, கடந்த சில தினங்களாக இக்கூட்டு குறித்து அங்காங்கே எழுந்துள்ள ஒரு முக்கிய விமர்சனத்திற்கு நான் விளக்கமளிக்க விரும்புகிறேன்.

இக்கூட்டானது "இனவாத அடிப்படையிலானது" என்ற வாறு முன்வைக்கப்படும் விமர்சனங்களில் எவ்வித உண்மையுமில்லை.

தமிழ் பேசும் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி மக்கள் ஆணையோடு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆறு பிரதான கட்சிகளின் ஒருங்கிணைப்பாகவே இது உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் இறைமை, சட்டத்தின் ஆட்சிக்கு விடுக்கப்படும் சவால்கள், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றைப் பாதுகாப்பது போன்ற பொதுவான கோட்பாடுகளை முன்னிறுத்தியே இப்பாராளுமன்றக் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன.

தேர்தல் காலங்களிலும் ஏனைய பொதுவான காலகட்டங்களிலும் சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொள்கின்ற சவால்களுக்கு கூட்டுச் செயற்பாடுகள் மூலம் முறையான தீர்வுகளைக் காண்பதே எங்களது முதன்மை நோக்கமாகும்.

நாட்டின் பொதுவான குறிக்கோள்களுக்கமைவாகச் செயற்பட்டு எங்களுடைய சமூகங்களின் விடிவை நோக்கிய நியாயமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதே இவ்வொருங்கிணைப்பின் அடிப்படை எதிர்பார்ப்பாகும்-என்றார். (அ)

# ஆணையாளருக்கு உயிர் அச்சுறுத்தல் மாநகர சபை ஊழியர் சிறையிலடைப்பு

அம்பாறை, ஜூலை. 15

கல்முனை மற்றும் அக்கரைப்பற்று மாநகர சபைகளின் ஆணையாளர் என்.எம். நௌபீஸூக்குக் கடமை நேரத்தில் உயிர் அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கல்முனை மாநகர சபை ஊழியரை 2 சரீரப் பிணைகளில் விடுவிப்பதற்கு கல்முனை நீதிமன்ற நீதிவான் கே.எல்.எம்.சாஜித் உத்தரவிட்டார்.

குறித்த சந்தேக நபரை 02 சரீரப் பிணைகளில் விடுவிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த போதிலும், நீதிமன்ற வேலை நேரத்துக்குள் உரிய முறையில் பிணை எடுக்கத் தவறியமையினாலேயே அவர் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கல்முனை மாநகர சபைக்குள் வைத்து, அதன் ஆணையாளர் என்.எம். நௌபீஸை அதே சபையில் பணி புரியும் ஊழியர் ஒருவர் கடமை நேரத்தில் அச்சுறுத்தியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக ஆணையாளரினால் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, சந்தேகநபரான ஊழியர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று முன் தினம் திங்கட்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் கே.எல்.எம். சாஜித் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, சந்தேகநபரை 2 சரீரப் பிணைகளில் விடுவிப்பதற்கு நீதிவான் உத்தரவிட்டார். எனினும், நீதிமன்ற நேரம் முடிவடையும் வரை சந்தேகநபர் சார்பில் பிணை எடுப்பதற்கு எவரும் முன்வராத காரணத்தினால், அவர் சிறைச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (அ)

# கதிர்காம பாதயாத்திரையில் பயணித்த மூன்றாவது யாத்திரிகரும் திடீர் மரணம்!

காரைதீவு, ஜூலை. 15

கதிர்காம பாதயாத்திரையில் பயணித்த மூன்றாவது யாத்திரீகர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை திடீரென மரணமானார்.

இச்சம்பவம் குமுக்கனுக்கும் நாவலடிக்கும் இடையிலுள்ள கஜபா வெட்டை எனும் இடத்தில் இடம் பெற்று இருக்கிறது .

ஏறாவூர் களுவன்கேணியைச் சேர்ந்த பிரதி அதிபர் கே.பாக்கியராசா (வயது-52)என்பவரே இவ் விதம் மரணமான மூன்றாவது யாத்திரீகர் ஆவார்.

இவர் மாரடைப்பு காரணமாக மரணமடைந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

இவரது சடலம் தற்சமயம் பாணமை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது சடலத்தை லாகுகலை பிரதேச பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். புனிதராஜன் பார்வையிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நிதிப் பிரச்னை...

முறைமையையே எதிர்பார்த்திருந்தனர். இதற்கமையவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இத்தகையதொரு புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு, அதன்படி தேர்தல்களும் நடத்தப்பட்டன.

புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், மக்கள் தங்களது தொகுதிக்கான பிரதிநிதியை நேரடியாக அடையாளம் காணக்கூடியதாக இருந்ததுடன், பழைய தேர்தல் முறைமைகளில் காணப்பட்ட தேவையற்ற விருப்பு வாக்கு மோதல்களும் முற்றாக ஒழிக்கப்பட்டன. அத்துடன், தேர்தல் பிரச்சாரங்களுக்கான செலவுகளும் கணிசமாகக் குறைந்தன. அதேவேளை, பெண்களுக்கான பிரதிநிதித்துவமும் இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

இதேபோன்று, விருப்பு வாக்கு முறைமையற்ற, தொகுதி ரீதியில் மக்கள் பிரதிநிதிகளைப் பெற்றுத்தரும் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் புதிய தேர்தல் முறைமையே மாகாணசபைகளுக்காகவும் முன்மொழியப்பட்டது. மக்களின் இந்த விருப்பங்களை ஒதுக்கித்தள்ளிவிட்டுப் பழைய தேர்தல் முறைமைக்கு நாம் திரும்ப முடியாது.

எனவே, இந்த புதிய தேர்தல் முறைமை தொடர்பான பணிகளை நாம் பாராளுமன்றக் குழு ஒன்றிடம் ஒப்படைத்துள்ளோம். இக்குழு கூடி, மாகாண சபைகளுக்கான புதிய தேர்தல் முறைமையின் கீழ் எல்லை நிர்ணயப் பணிகளை நிறைவு செய்து அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பாராளுமன்றத்தில் இது அங்கீகரிக்கப்பட்டவுடன் மாகாணசபை தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது.

மாகாண சபைகளின் நிர்வாகத்தை வெறுமனே ஆளுநர்களும், பிரதம செயலாளர்களும் மாத்திரம் கொண்டு நடத்த முடியாது. மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற முக்கிய துறைகளின் பெரும்பாலான நிறுவனங்கள் மாகாண சபைகளின் கீழேயே நிர்வகிக்கப்படுகின்றன. எனவே, பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட அனைத்துக் தரப்பினரும் ஒன்றிணைந்து இந்த தேர்தல் முறைமையை விரைவாக தயாரித்து வழங்க வேண்டும்.

அரசாங்கத்திடம் தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை எனச் சில தரப்பினர் தெரிவிக்கும் கருத்துக்களை நாம் முழுமையாக மறுக்கிறோம். அரசாங்கத்திற்கு எவ்வித நிதிப் பிரச்னையும் இல்லை. திடீரென ஒரு பொதுத் தேர்தல் நடத்த நேரிட்டாலும், அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதுடன், அதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.- என்றார். (அ)

## எத்தனை கூட்டணி...

கூட்டு தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ள கூட்டணி என்பது, அது வெறும் கூட்டு சாம்பாராக மாறும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இடமில்லை என்பது மக்களுக்கு தெரிந்த விடயம். இந்தக் கூட்டணி இந்த நாட்டில் இலஞ்சத்தை ஒழிப்பதற் காக, மோசடிகளை ஒழிப்பதற்காக, திருடர்களைப் பிடிப்பதற் காக, நல்ல வேலைகளைச் செய்வதற்கான கூட்டணியா? அல் லது திருடர்களைப் பாதுகாப்பதற்கும், வஞ்சகர்களைப் பாது காப்பதற்கும், ஊழல் மோசடிகளை செய்பவர்களை பாதுகாப்ப தற்குமான கூட்டணியா என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

இந்தக் கூட்டணியில் இருக்கின்றவர்களைப் பார்க்கின்ற பொழுது கடந்த காலங்களில் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகக் காணப்பட்டு பிணையில் இருக்கின்ற நபர்கள் தான் அதிகமாக இருக்கின்றார்கள். அவ்வாறு பிணையில் இருக்கிறவர்கள் நாளை கம்பி எண்ணுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

அதனால், சிறைக்குச் செல்வதற்கு முதல் எதையாவது செய்து இந்த அரசாங்கத்தை வீழ்த்தலாமா அல்லது அரசாங்கத்தை மாற்றலாமா என்கிற முயற்சியில் ஈடுபடுகின்ற ஒரு போக்காகவே இதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

எந்த வகையிலும் இவ்வாறான கூட்டணியால் அல்ல, இதனுடைய அப்பனால் அமைக்கப்படுகின்ற கூட்டணியாலும், தேசிய மக்கள் சக்தியை அசைக்க முடியாது.

ஏனென்றால், இன்று அவர்கள் கூட்டணி அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் மக்களோடு கூட்டணி அமைத்துக் கொண்டிருக்கின்றோம். மக்களுடைய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் - என்றார். (அ)

## செம்மணிப் புதைகுழி...

ஆரம்பமாகி முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் 09 நாள்கள் நடைபெற்றதில், 19 மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

அதனை அடுத்து இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி வரையிலான 45 நாள்கள் நடைபெற்றபோது, முதலாம் கட்டத்தில் அகழ்ந்து எடுக்கப்பட்ட 19 என்புக்கூடுகள் உட்பட 240 என்பு கூடுகள் அடையாளம் காணப்பட்டன. இந்நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக 56 நாள்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்ப ட்டு மே மாதம் 09ஆம் திகதி வரையிலான 12 நாள்கள் இடம் பெற்ற அகழ்வுப் பணிகளில் 21 என்புக்கூடுகள் மீட்கப்பட்ட நிலையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

மீண்டும், மூன்றாம் கட்டத்தின் இரண்டாம் பகுதி அகழ்வுப் பணிகள் கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி ஜூன் 23ஆம் திகதி வரையிலான 22 நாள்கள் நடைபெற்ற நிலையில், பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

அதன் அடிப்படையில் முதலாம், இரண்டாம் கட்டங்கள் மற்றும் மூன்றாம் கட்டத்தில் 32 நாள்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளில் 412 என்பு கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 409 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தொல்லியல் பிரச்னை...

கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாக நிலவி வரும் பிரச்னைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

தொல்லியல் திணைக்களம் இன, மத பாகுபாடின்றி செயற்படுகிறது என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடையே ஏற்படவேண்டுமெனில், திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்தில் உள்ள 54 கடைகள் அகற்றப்படவேண்டும் என்றும், போரதீவுப்பற்று பிரதேச சபை மற்றும் வாழைச்சேனை பிரதேச சபைகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற வழக்குகள் மீளப் பெறப்படவேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வலியுறுத்தினார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நேரடியாக விஜயம் செய்து, தாந்தாமலை முருகன் ஆலயம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் காணப்படும் தொல்லியல் தொடர்பான பிரச்னைகளை ஆராய்ந்து, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

## ஜனநாயக விரோத...

தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிர்வாக மாற்றங்களை மேற்கொள்ளும்போது, குறிப்பிட்ட நபர்களின் நலன்களை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் முழு நாட்டையும் பிரதிபலிக்கும் வகையில் செயற்பட வேண்டும்.

இத்தகைய முக்கிய தீர்மானங்களை எடுக்கும்போது, துறைசார் நிபுணர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்து, வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும்.

மக்கள் அனைவரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சூழலில், இவ்வாறான நடைமுறைகள் சாதாரண ஊழியர்களுக்கு இழைக்கும் பாரபட்சமாகவே அமையும்.

அரசாங்கம் முன்னெடுக்கும் எந்தவொரு நிர்வாக மாற்றமும் ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் மக்களின் நலன்களை மையப்படுத்தியதாகவும் அமைய வேண்டும்- என்றார். (அ)

## இலங்கையில் முதன்...

மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இது இலங்கையின் சுகாதாரச் சேவையை புதியதொரு தொழில்நுட்ப யுகத்திற்கு இட்டுச் செல்லும் முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

இரண்டு மருத்துவ நிபுணர்கள் ரோபோடிக் தொழில்நுட்பத்தின் உதவியுடன் இந்த அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டனர். அவற்றில் ஒன்று சுமார் 50 வயதுடைய பெண்ணொருவரின் கருப்பையை அகற்றும் அறுவை சிகிச்சையாகும். மற்றையது சிறுநீரகம் தொடர்பான சிக்கலானதொரு அறுவை சிகிச்சை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தொழில்நுட்பத்தின் கீழ், அறுவை சிகிச்சையானது ரோபோவினால் தன்னிச்சையாக மேற்கொள்ளப்படுவதில்லை மாறாக, அறுவை சிகிச்சை நிபுணரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழேயே அது நிகழ்கிறது.

மருத்துவர் ஒரு விசேட கட்டுப்பாட்டு அமைப்பைப் பயன்படுத்தி ரோபோ கரங்களை இயக்குகிறார். ரோபோ அமைப்பானது அந்த அசைவுகளை மிக உயர்ந்த துல்லியத்தன்மையுடன் நோயாளியின் உடலுக்குள் செயல்படுத்துகிறது.

செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) மற்றும் நவீன நிரலாக்க தொழில்நுட்பத்தின் பயன்பாடு காரணமாக, மனிதக் கைகளால் செய்ய கடினமாக இருக்கும் மிக நுணுக்கமான அசைவுகளைக் கூட மிகத் துல்லியமாகச் செய்யும் ஆற்றல் இந்த அமைப்பிற்கு உள்ளது. (அ)

## ஜே.வி.பிக்கு விவசாயிகளினால்...

சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

விவசாய அமைச்சரின் கூற்றுப்படி ஒரு கிலோ நெல் உற்பத்திக்கு ரூ. 137 செலவான போதிலும், அரசாங்கம் ரூ. 120 நிலையான விலையையே பெற்றுக் கொடுக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு மத்தியில் விதை நெல் கிடைக்காமை, தரமான உரம் மற்றும் விதை நெல் தட்டுப்பாடு, விவசாய இரசாயனங்களின் தரம் குறைந்துள்ளமை போன்ற பிரச்சினைகள் காணப்படுவதுடன், விவசாய உபகரணங்களின் விலைகளும் அதிகரித்து காணப்படுகின்றன. யானை-மனித மோதலினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் அறுவடைக்கு நிலையான விலை இல்லை. நெற் களஞ்சியசாலைகளில் கடந்த போகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இன்னும் அவ்வாறே காணப்படுகின்றது. இவ்வாறான பிரச்னைகளுக்கு மத்தியில் விவசாயிகளுக்கு எவ்வாறு நீதி கிடைக்கும் என்ற கேள்வி எழுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அன்று தேர்தல் காலத்தில் வயல்களில் நெற்கதிர்களை வாயில் கடித்துக் கொண்டு ரூ. 150 உத்தரவாத விலையைப் பெற்றுத் தருவோம் என்று கூறினாலும், தற்சமயம் நெல் விலை அதிகரித்தால் நுகர்வோருக்கு அநீதி ஏற்படும் எனக் கூறி வருகின்றனர். இன்று நுகர்வோரோ அல்லது விவசாயியோ அல்ல, மாறாக இடைத்தரகர்களே இங்கு அதிக இலாபம் ஈட்டு வருகின்றனர். எனவே, இப்போதாவது விவசாயிகளின் செலவுக்கு ஏற்ற நியாயமான விலையை அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்து, இலாபத்தை ஈட்டிக் கொடுக்க வேண்டும். போலவே, சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்து, நெல் கொள்வனவை மேலும் முறைப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். மக்கள் ஆணைக்கு மாறு செய்யாமல் விவசாயிகளுக்கு நீதியை பெற்றுக் கொடுக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (அ)

## சக மாணவர்களை...

புதிதாக இணைந்திருந்த மூன்று மாணவர்கள் இரும்புக் கம்பியுடன் மற்றொரு வகுப்பறைக்குள் நுழைந்து அங்கு கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவர்களை தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் இரு மாணவர்கள் பலத்த காயமடைந்த நிலையில், அவர்கள் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவத்தைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட மாணவர்களின் குடும்பத்தினரும் உறவினர்களும் பாடசாலை வளாகத்தில் ஒன்றுகூடி எதிர்ப்பை வெளியிட்டதுடன், இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

இதனையடுத்து, சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று மாணவர்களையும் கைது செய்த புதுக்குடியிருப்பு பொலிஸார், அவர்களை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம், கைது செய்யப்பட்ட மாணவர்களை 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களை அடையாளம் காணும் விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். (அ)

## தமிழ்க் கட்சிகள்...

பதிலளிக்கையிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார்.

" எதிரணிகளின் ஒன்றிணைவு பற்றி எதிர்க்கட்சி தலைவரிடம்தான் கேட்க வேண்டும். ஆளுங்கட்சியிடம் பிரச்சினையென்றால் என்னிடம் கேளுங்கள். எதிரணிகளை இணைத்துக் கொண்டு பயணிக்க வேண்டியது எதிர்க்கட்சி தலைவரின் பொறுப்பு.

எங்கள் பக்கம் 159 எம்.பிக்கள் உள்ளனர். அவர்களுடன் நாம் பயணிக்கின்றோம். எனவே, புதிய கூட்டணிகளை உருவாக்க வேண்டிய தேவைப்பாடு எமக்கு கிடையாது." எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்குரிய வழிமுறைகளின் ஓர் அங்கமாக பொது கட்டமைப்பின்கீழ் செயல்படுவதற்கு ஆறு பிரதான தமிழ் பேசும் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இலங்கை தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியனவே இவ்வாறு சங்கமித்துள்ளன.(அ)

## துப்பாக்கிச் சூடு...

சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவத்தின் போது, கைதிகள் சிறைச்சாலையின் இறுதி மரக் கதவையும் உடைத்துக் கொண்டு வெளியே வர முயன்ற சந்தர்ப்பத்தில், சிறைச்சாலை அதிகாரி ஒருவரால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில், சிறைச்சாலைக்குள் இருந்த கைதிகள் குழுவொன்று சிறைச்சாலை அதிகாரிகள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளமை தெரியவந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் நிலைமையைக் கட்டுப்படுத்தவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளவுமே இந்த அதிகாரி துப்பாக்கியைப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூடானது சிறைச்சாலை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே நடத்தப்பட்டதா அல்லது அதிகார வரம்பை மீறிச் செயல்படப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காகத்தற்போது ஒரு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த கொடூரமான மோதல் காரணமாக, இதுவரை 10 சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 31 பேர் உயிரிழந்துள்ளனர். (அ)

## ஒவ்வொரு தென்னிந்திய...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் ஒரு சிலரே அடைந்த சுதந்திரத்தை அந்தப் பெண்களுக்கு வழங்கியது.

அவரது அசாத்திய திறமை பாடுவதில் மட்டுமல்லாமல், நடிப்பிலும் வெளிப்பட்டது. அவரது பாட்டுத் துணையான மறைந்த எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தைப் போலவே, அவரும் கிராமப்புற பின்னணிக்கு அந்நியமில்லாத வகையில், அதனுடன் முற்றிலும் ஒத்துப் போகும் விதமாக ஒரு தயக்கம், ஒரு விசும்பல், ஒரு சிரிப்பு, ஒரு ஏக்கம் அல்லது மகிழ்ச்சியைத் தன் பாடலுக்குள் கொண்டு வந்து விடுவார்.

கிழக்கே போகும் ரயில் திரைப்படத்தில் இடம்பெற்ற மற்றொரு உன்னதமான பாடலான பூவரசம்பூ பூத்தாச்சு என்ற பாடல், ஒரு கிராமத்திலிருந்து மட்டுமே வரக்கூடிய பாடலாகும். இதில் ஜானகி அம்மாவின் குரல் காதல் விளையாட்டு, வெட்கம், தேவை, நம்பிக்கை ஆகியவற்றிற்கும், அத்துடன் அது நடக்க வேண்டும் என்ற தெய்வத்தின் மீதான தீவிரமான வேண்டுதலுக்கும் இடையில் ஊசலாடுகிறது. அந்தச் சூழ்நிலையில் ஒரு சிறுமி என்ன உணர்வாளோ, அதன் பாரத்தை அப்படியே கடத்துகிறது.

அவரது குரல் நாயகிகளின் அச்சங்கள், அவர்களின் ஆசைகள், அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் கனவுகளுக்கு முழுமையான வடிவத்தைக் கொடுத்தது.

கடற்கரைக் கிராமத்தைப் பின்னணியாகக் கொண்ட அலைகள் ஓய்வதில்லை திரைப்படத்தில் வரும் ஆயிரம் தாமரை மொட்டுகளே பாடலில், இளம் ராதாவும் கார்த்திக்கும் ஒருவரையொருவர் கண்டறியும் அந்த மென்மையான, தயக்கமான உடல் ரீதியான நெருக்கத்தை, எஸ்.பி.பி-யுடனான அந்த டூயட் பாடலில் ஜானகியால் கொண்டு வர முடிகிறது. பாடலுக்கு அவர் கொண்டு வரும் அந்த நம்பகத்தன்மை தான், ஜானகியை அவரது நாயகிகளுக்கும், ரசிகர்களுக்கும், நட்சத்திரங்களுக்கும், இசையமைப்பாளர்களுக்கும் மற்றும் இயக்குனர்களுக்கும் பிரியமானவராக்கியது.

அவர் "இசை அரசி" (Queen of Music) என்று சும்மா அழைக்கப்படவில்லை எந்தவொரு பெண்ணும் தீவிரமாக உணரும் எதையும் தனது குரலால் உண்மையாக வெளிப்படுத்தும் ஆற்றல் அவருக்கு இருந்தது. தமிழ் சினிமாவில் நாம் கண்ட கிராமப்புறக் காட்சிகளின் செழுமை, பாரதிராஜாவிற்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறதோ, அதே அளவு ஜானகி அம்மாவிற்கும் கடமைப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# கட்டுநாயக்க விமான நிலையத்தை விஸ்தரிக்க 7.26 மில்லியன் டொலர்!

## அனுமதியளித்தது அமைச்சரவை

கொழும்பு, ஜூலை. 15

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படு முனையத்தை விஸ்தரிக்கும் பணிகளை நிறைவு செய்வதற்காக, மெஸ்ஸர்ஸ் மேகா இஞ்ஜினியரிங் நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், 36 செக் இன் கவுண்டர்கள் மற்றும் பயணிகள் முனையத்தை விமான அணுகல் பகுதிகளுடன் இணைக்கும் ஆறு நடைபாதைகளைக் கொண்ட புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதன் மூலம் புறப்படும் பயணிகளுக்கான வசதிகளை விஸ்தரிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

சர்வதேச போட்டித்தன்மை கொண்ட கொள்முதல் முறைமைக்கமைய, மூன்று ஏலங்கள் பெறப்பட்டன. உயர் மட்ட நிரந்தர கொள்முதல் குழுவின் மதிப்பீடு மற்றும் பரிந்துரைகளைத் தொடர்ந்து, மிகக் குறைந்த தகுதியான ஏலதாரராக மேகா இஞ்ஜினியரிங் நிறுவனம் அடையாளப்படுத்தப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மதிப்பு 7.26 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் 3.77 பில்லியன் ரூபா வாகும். இதற்கான யோசனையை துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்திருந்தார். (அ)

# டித்வா புயலினால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மீனவர்களுக்கு வலைகள்

கிளிநொச்சி, ஜூலை. 15

டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மீனவர்களுக்கு வலைகள் மற்றும் படகுகள் வழங்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட டித்வா புயலினால் கடற்றொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். படகுகள் வலைகள் அழிவடைந்தன.

அரசாங்கம் அவற்றுக்கான இழப்பீடுகளை வழங்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ள நிலையில் நேற்று டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மீனவர்களுக்கு வலைகள் மற்றும் படகுகள் வழங்கும் நிகழ்வு கடற்றொழில் திணைக்கள மாவட்ட அலுவலகத்தில் கடற்றொழில் திணைக்கள் மாவட்ட உதவிப்பணிப்பாளர் வி.கலிஸ்ரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் கலந்து கொண்டு மீனவர்களுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரின் இணைப்பாளர் ம.மோகன், திணைக்கள உத்தியோகத்தர்கள், மீனவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது 73 மீனவர்களுக்கு வலைகளும் 2 மீனவர்களுக்கு படகுகளும் வழங்கப்பட்டன. (அ)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் நோய் தடுப்பு சிகிச்சை விடுதி திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை. 15

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில், "அரவணன்" நோய்த் தடுப்பு சிகிச்சை விடுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பாலம் அமைப்பின் நிதி அனுசரனையில்,ந்த நோய்த்தடுப்பு சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

பிரதம விருந்தினராக அவுஸ்திரேலிய தூதுவர் மத்யூ டக்வொர்த் பங்கேற்றார்.

இந்த நிகழ்வில், கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர், சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீபவானந்தராஜா, அவுஸ்திரேலியா பாலம் அமைப்பின் பணிப்பாளர்களான பிரணவன் மற்றும் சேந்தன் என பலர் பங்கேற்றனர்.



அவுஸ்திரேலியாவின், மனித நேயத்திற்கான பாலம் எனும் அமைப்பின் ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர் செலவில் அமைக்கப்பட்ட இந்த விடுதி, நோயாளர்கள் இறப்புக்கு முன் தமது இறுதிக் காலத்தை மருத்துவ உதவியுடன் கழிப்பதற்காக உதவுகின்றது.

இந்த விடுதியில், மருத்துவர்களின் பரிந்துரையுடன், யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் மருத்துவ சிகிச்சையை பெற்றுக்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 5,386 ஷம்பு பைக்கெற்றுகள் சிக்கின!

மன்னார், ஜூலை. 15

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சுமார் 5,386 ஷம்பு பைக்கெற்றுகள் அடங்கிய தொகுதியை, தலைமன்னார் ஊருமலை கடற்கரைப் பகுதியில் இலங்கை கடற்படையினர் கண்டறிந்துள்ளனர்.

இலங்கை கடற்படையின் வடமத்திய கடற்படைக் கட்டளைக்குட்பட்ட இலங்கை கடற்படைக் கப்பல் "தம்மென்னா" மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்த ஷம்பு பைக்கெற்றுகள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, ஊருமலை கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கியிருந்த இந்த ஷம்பு பைக்கெற்றுகள், சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கப்பட்டதாக கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்.

கைப்பற்றப்பட்ட சுமார் 5,386 ஷம்பு பைக்கெற்றுகள் மேலதிக விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கையில் மிகவிரைவில் பயணிகள் ட்ரோன் சேவை!

கொழும்பு, ஜூலை. 15

மேம்பட்ட வான்வழிப் போக்குவரத்துத் தீர்வுகள் குறித்த ஆய்வுகளின் ஒரு பகுதியாக, இலங்கையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் ட்ரோன் களை அறிமுகப்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் பயணிகள் ட்ரோன்களை இயக்கு வதற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பிடும் முன் னோடித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை ஏற்கனவே தொடங்கியுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் தமிந்த ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

ஒவ்வொரு ட்ரோனும் ஆறு பயணிகள் வரை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டதாக இருக்கும் என்று அவர் கூறினார்.

சீனா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் இது போன்ற பயணிகள் ட்ரோன் சேவைகள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், பரவலான பயன்பாட்டைக் கருத்தில் கொள்வதற்கு முன்னதாக ஒரு முன்னோடித் திட் டத்தின் மூலம் இத்தொழில்நுட்பத்தை மதிப்பீடு செய்ய இலங்கை எதிர்பார்ப்பதாகவும் தமிந்த ரம்புக்வெல்ல குறிப்பிட்டார்.

பெரிய அளவிலான செயல்பாட்டுக்கு முன்னதாக, பயணிகள் ட்ரோன் சேவைகள் தேவையான விமானப் போக்குவரத்துத் தரநிலைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிசெய்யும் வகையில், அவற்றின் செயல்பாட்டு, ஒழுங்குமுறை மற்றும் பாதுகாப்பு அம்சங்களை மதிப்பிடுவதில் இத்திட்டம் கவனம் செலுத்தும் என்று அவர் மேலும் கூறினார். (அ)

# உலகின் சிறந்த 50 உணவுச் சுற்றுலா தளங்களில் ஒன்றாகியுள்ள இலங்கை!

கொழும்பு, ஜூலை. 15

"ட்ராவல் அண்ட் டூர் வேர்ல்ட்" நிறுவனம் 2026 ஆம் ஆண்டிற்காக வெளியிட்டுள்ள புதிய அறிக்கையின்படி, உலகின் சிறந்த 50 உணவு சுற்றுலாத் தளங்களின் பட்டியலில் இலங்கை இடம்பிடித்துள்ளது.

இந்தத் தரவரிசையில் மெக்ஸிகோ முதலிடத்தையும், இத்தாலி இரண்டாம் இடத்தையும், ஸ்பெயின் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. இலங்கை இந்தப் பட்டியலில் 50 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

உணவு கலாசார பாரம்பரியம், பிராந்திய உணவுகளின் பன்முகத்தன்மை, வீதி உணவுக் கலாசாரம், உள்ளூர் மூலப் பொருள்களின் பயன்பாடு, உயர்தர உணவுகள், நிலைத்தன்மை மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைக்கும் தனித்துவமான உணவு அனுபவங்கள் உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தரவரிசை தயாரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து உயர்தர மாணவர்களுக்கு மானியம்!

கொழும்பு, ஜூலை. 15

ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை, செயலில் உள்ள உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு, க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக "நிபுணதா சவிய" எனும் உதவித் திட்டத்தின் கீழ் 50,000 ரூபா வரை நிதி உதவியை வழங்குவதாக அறிவித்துள்ளது.

தகுதியுள்ள மாணவர்கள், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட மற்றும் தேசிய தொழில் தகைமை மட்டம் 3, 4 மற்றும் 5 ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களால் நடத்தப்படும் 100 தொழிற்பயிற்சி நெறிகளில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.

இந்த நிதி உதவி கடனல்ல என்றும், இதை மீளச் செலுத்தவேண்டிய அவசியமில்லை என்றும் ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை வலியுறுத்தியுள்ளது.

திறமையான தலைமுறையை உருவாக்குவதையும், அதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு வாய்ப்புகளை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். (அ)

# யாழ்.சிறைச்சாலை அலுவலர் மீது விளக்கமறியல் கைதி தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூலை. 15

யாழ்ப்பாணத்தில் விளக்கமறியல் கைதியொருவர் சிறைச்சாலை உத்தியோகத்தர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான சிறைச்சாலை உத்தியோகத்தர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். போதைப்பொருள் வழக்கு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதியொருவர் நேற்று முன்தினம் திங்கள் கிழமை நீதிமன்ற வழக்கு விசாரணை நடைபெற்றபோது, குறித்த நபரின் விளக்கமறியலை நீதிமன்று நீடித்து உத்தர விட்டது.

அதனை அடுத்து விளக்கமறியல் கைதியை மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றபோது, குறித்த நபர் சிறைச்சாலை உத்தியோகத்தர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார். தாக்குதலில் காயமடைந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் யாழ் . போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண... பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org